<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>

**அசல் வழக்கு எண். 7/2024 வா.சா.1**

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 16–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: செல்வம் தந்தை பெயர்: அமரி

-----------------------------------------------------------------

<u>16.06.2026.</u>**முதல் விசாரணைத் தொடர்ச்சி:**

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 27.09.2012ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கு மேற்கே உள்ள சர்வே எண் 392/2 மனையிடத்திற்கு வாதி பெயருக்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பு உத்தரவு அசல் **வா.சா.ஆ–1** ஆகவும்,
2. 10.01.2024ம் தேதியிட்ட மேற்படி சர்வே எண். 392/2 மனையிடத்திற்கு வாதி பெயரில் வழங்கப்பட்ட நத்தம் நிலவரித்திட்ட துாய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–2** ஆகவும்,
3. 11.01.2024ம் தேதியிட்ட மேற்படி சர்வே எண்.392/2 மனையிடத்திற்கு வாதி பெயரில் வழங்கப்பட்ட நத்தம் நிலவரித்திட்ட துாய சிட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–3** ஆகவும்
4. 11.01.2024ம்தேதியிட்ட மேற்படி சர்வே எண். 392/2 மனையிடத்தில் வாதி கட்டியிருக்கும் வீட்டிற்கான வரி இரசீது (எண்ணம்–2) அசல் **வா.சா.ஆ.–4** ஆகவும்,
5. 11.01.2024ம் தேதியிட்ட மேற்படி வீட்டிற்கு 2002 ஆண்டு முதல் வாதி வீட்டுவரி செலுத்தி வருவதற்கான சான்று அசல் **வா.சா.ஆ–5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பிராதுபடி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(வழக்கறிஞர் வேண்டகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)